சுகாதார அமைச்சு | கல்வி அமைச்சு

Ontario

# பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பகத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் பிள்ளைகளுக்கான COVID-19 சோதனை முறைமை

பதிப்பு 3: அக்டோபர் 18, 2021

**ஒவ்வொரு நாளும் மாணவர்கள் அல்லது பிள்ளைகள் பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்வதற்கு முன்னர் COVID-19 சோதனை செய்யப்பட வேண்டும். ஒரு பிள்ளையின் சார்பாகப் பெற்றோர்/பாதுகாவலர்கள் இதை நிரப்பலாம்.**

திகதி (mm-dd-yyyy) ____________

## சோதித்தறிதலுக்கான கேள்விகள்

1. **இந்த அறிகுறிகளில் எதனையாவது மாணவர்/பிள்ளை தற்போது அனுபவிக்கின்றாரா?**
இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிகுறிகள் பொதுவாக COVID-19 உடன் தொடர்புடைய அறிகுறிகளாகும். உங்களுக்கு இந்த அறிகுறிகள் இருந்தால், நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதற்குரிய சோதனையை நாட வேண்டும். COVID-19 அறிகுறிகள் உள்ளவர்களுக்கு அல்லது COVID-19 உள்ளதாக அறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு, விரைவான ஆன்டிஜென் சோதனை பயன்படுத்தப்படக் கூடாது என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

நோயுற்ற அல்லது கீழே குறிப்பிடப்படாதவை உள்ளிட்ட, நோயின் அறிகுறிகளைக் கொண்ட எவரும் வீட்டிலேயே இருக்க வேண்டும் மற்றும் தேவைப்பட்டால் அவர்களின் சுகாதார வழங்குநரிடம் மதிப்பீட்டைப் பெற வேண்டும்.

புதிதான, மோசமடைந்து கொண்டிருக்கும் மற்றும் ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்ற எதனையும்/அனைத்தையும் தெரிவு செய்யவும்.

| | |
|---|---|
| **காய்ச்சல் மற்றும்/அல்லது குளிருணர்ச்சி**<br>வெப்பநிலை 37.8 டிகிரி செல்சியஸ்/100 டிகிரி பாரன்ஹீட் அல்லது அதிலும் அதிகமாக இருத்தல் மற்றும்/அல்லது குளிருணர்ச்சி | ☐ ஆம் ☐ இல்லை |
| **இருமல் அல்லது குரைப்பது போன்ற இருமல் (croup)**<br>தொடர்ச்சியாக, வழக்கத்தை விட அதிகமாக ஏற்படும், சுவாசிக்கும்போது ஒரு விசில் சத்தம் போடுவது போன்ற இருமல் (ஆஸ்துமா, தொற்றுநோய்க்குப்-பின்னர் எதிரிடையாகத் தொழிற்படும் சுவாசப்பாதைகள் அல்லது ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் ☐ இல்லை |
| **மூச்சுத் திணறல்**<br>மூச்செடுப்பதில் சிரமம், ஆழமாகச் சுவாசிக்க முடியாதிருப்பது (ஆஸ்துமா அல்லது அவர்களுக்கு ஏற்கனவே உள்ள பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது) | ☐ ஆம் ☐ இல்லை |
| **சுவை அல்லது வாசனை உணர்வு குறைதல் அல்லது இழப்பு**<br>பருவகால ஒவ்வாமைகள், நரம்பியல் கோளாறுகள் அல்லது ஏற்கனவே இருப்பதாக அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் ☐ இல்லை |
| **குமட்டல், வாந்தி மற்றும்/அல்லது வயிற்றுப்போக்கு**<br>வயிற்றெரிவுடன் கூடிய குடல் நோய், பதட்டம், மாதவிடாய் காரணமாக ஏற்படும் வயிற்றுவலிகள் அல்லது அவர்களுக்கு இருப்பதாக ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் ☐ இல்லை |

2. **மாணவர்/பிள்ளைக்குப் பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று பொருந்துகின்றதா?**
   - அவர்கள் COVID-19 க்கு எதிராக முழுமையாகத் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளார்கள் (ஒரு டோஸ் அல்லது இரண்டு டோஸ் தடுப்பூசித் தொடரின் இறுதி டோஸிலிருந்து 14 நாட்கள் அல்லது அதற்கு மேல் ஆகிவிட்டது)
   - அவர்கள் கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாகச் சோதிக்கப்பட்டுள்ளனர் (பின்னர் குணமடைந்து விட்டார்கள்)

   ஆம் எனில், 3, 4, 5 வது கேள்விகளைத் தவிர்க்கவும்

   இந்த சோதனை முறைமையை நீங்கள் பூர்த்தி செய்யும்போது தனிப்பட்ட சுகாதாரத் தகவல்கள் சேகரிக்கப்படுவதில்லை. தடுப்பூசி நிலை மற்றும் முன்னைய தொற்று வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட துல்லியமான தனிமைப்படுத்தல் வழிமுறைகளை வழங்குவதே இந்தக் கேள்வியின் நோக்கமாகும்.

3. **மாணவர்/பிள்ளையுடன் ஒருமித்து வசிக்கும் எவருக்காவது புதிதாக COVID-19 அறிகுறிகளில் ஏதாவது தற்போது இருக்கின்றதா மற்றும்/அல்லது அறிகுறிகள் ஏற்பட்ட பின்னர் சோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை

   **பிள்ளைகள் (<18 வயது)**: காய்ச்சல் மற்றும்/அல்லது குளிருணர்ச்சி, இருமல் அல்லது குரைப்பது போன்ற இருமல், மூச்சுத் திணறல், சுவை அல்லது வாசனை குறைதல் அல்லது இழப்பு, குமட்டல், வாந்தி மற்றும்/அல்லது வயிற்றுப்போக்கு:

   **வளர்ந்தோர் (≥18 வயது)**: காய்ச்சல் மற்றும்/அல்லது குளிருணர்ச்சி, இருமல் அல்லது குரைப்பது போன்ற இருமல், மூச்சுத் திணறல், சுவை அல்லது வாசனை குறைதல் அல்லது இழப்பு, சோர்வு, தசை வலி

   அறிகுறிகளை அனுபவிப்பவர் கடந்த 48 மணி நேரத்தில் COVID-19 தடுப்பூசியைப் பெற்று, அதன் பின்னர் மட்டுமே லேசான சோர்வு, தசை வலி மற்றும்/அல்லது மூட்டு வலி ஆகியன தொடங்கியிருந்தால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

4. **COVID-19 தொற்றைத் தற்போது கொண்டுள்ள ஒருவரின் "நெருங்கிய தொடர்பாளர்" எனக் கடந்த 10 நாட்களில், மாணவர்/பிள்ளை அடையாளம் காணப்பட்டுள்ளாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   நீங்கள் தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை என்று பொது சுகாதாரப் பிரிவு உங்களுக்கு அறிவுறுத்தியிருந்தால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

5. **கடந்த 10 நாட்களில், தங்கள் செல்போனில் COVID எச்சரிக்கை அறிவிப்பை மாணவர்/பிள்ளை பெற்றுள்ளாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   ஆய்வக அடிப்படையிலான PCR சோதனையில் மாணவர்/பிள்ளை எதிர்மறையாகச் சோதனை செய்திருந்தால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

6. **பின்வருவனவற்றில் ஏதாவது பொருந்துகின்றதா?** ☐ ஆம் ☐ இல்லை
   - **கடந்த 14 நாட்களில், மாணவர்/பிள்ளை கனடாவுக்கு வெளியில் பயணம் செய்துள்ளார் அத்துடன் தனிமைப்படுத்தி இருக்குமாறு அவருக்குக் கூறப்பட்டுள்ளது**
   - **கடந்த 14 நாட்களில், மாணவர்/பிள்ளை கனடாவுக்கு வெளியில் பயணம் செய்துள்ள்ளார் அத்துடன் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்லக்கூடாது என அவருக்குக் கூறப்பட்டுள்ளது**

   இந்தப் பிள்ளை/மாணவருக்கு **முழுமையாகத் தடுப்பூசி போடப்படவில்லை** ஆனால் **அவர் தடுப்பூசி போடப்பட்ட ஒருவருடன் சேர்ந்து பயணம் செய்திருந்த** படியால் மத்திய அரசின் தனிமைப்படுத்தலில் இருந்து விலக்குப் பெற்றிருந்தார், எனினும் 14 நாட்களுக்குப் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்கு அவர் செல்லக்கூடாது. மாணவர்/பிள்ளைக்கு இது பொருந்துமானால் "ஆம்" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

7. **மாணவர்/பிள்ளை தற்போது தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டில் தங்க வேண்டும்) என்று ஒரு மருத்துவர், சுகாதார வழங்குநர் அல்லது பொது சுகாதாரப் பிரிவு உங்களிடம் கூறியுள்ளதா?** ☐ ஆம் ☐ இல்லை
   ஒரு நோய்ப்பரவல் அல்லது தொடர்புத் தடமறிதல் இதற்கான காரணமாக இருக்கலாம்.

8. **கடந்த 10 நாட்களில், மாணவர்/பிள்ளை விரைவான ஆன்டிஜென் சோதனை அல்லது வீட்டு அடிப்படையிலான சுய-பரிசோதனைக் கருவி மூலம் நேர்மறையாகச் சோதனை செய்யப்பட்டிருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   ஆய்வக அடிப்படையிலான PCR சோதனையில் மாணவர்/பிள்ளை எதிர்மறையாகச் சோதனை செய்திருந்தால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

# சோதித்தறியும் கேள்விகளின் முடிவுகள்

❗ **1 வது கேள்வியின் கீழ்க் குறிப்பிடப்பட்ட அறிகுறிகளில் எவற்றுக்காவது "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- மாணவர்/பிள்ளைக்கு COVID-19 சோதனை செய்யப்பட வேண்டுமா என்பதை உள்ளடக்கிய ஆலோசனைகளை அல்லது ஒரு மதிப்பீட்டைப் பெறுவதற்காக மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளர் ஒருவருடன் பேசவும்.
  - **மாணவர்/பிள்ளைக்கு ஏற்பட்ட அறிகுறிகள் சோதனைகளில் எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உங்கள் பொது சுகாதாரப் பிரிவினால் அனுமதிக்கப்படும் வரை அல்லது அது வேறொரு நோய் எனக் கண்டறியப்படும் வரை, உங்கள் வீட்டிலுள்ள உடன்பிறப்புகள் அல்லது பிற நபர்கள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். தடுப்பூசி முழுமையாகப் போடப்பட்ட அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாக இருந்து பின்னர் குணமடைந்த வீட்டு உறுப்பினர்கள் வீட்டில் தங்கியிருக்கத் தேவையில்லை.**
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு.இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

❗ **3 வது கேள்விக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.

- உங்கள் உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவினால், அறிகுறிகளுக்கான சோதனைகளில் எதிர்மறையாகத் தெளிவாக்கப்பட்ட பின்னர், அல்லது மற்றொரு நோய் எனக் கண்டறியப்பட்ட பின்னர், பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை மீண்டும் செல்லலாம்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு.இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**4 வது கேள்விக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை 10 நாட்கள் சுயமாகத்-தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசரநிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- எந்த அறிகுறிகளைக் கண்காணிக்க வேண்டும், COVID-19 க்கான PCR பரிசோதனையை எப்போது செய்ய வேண்டும் உள்ளிட்ட விடயங்களுக்கு, உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது சுகாதாரப் பாதுகாப்பு வழங்குநரின் ஆலோசனையைப் பின்பற்றவும். COVID-19 உள்ளதாக அறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு, விரைவான ஆன்டிஜென் சோதனை பயன்படுத்தப்படக் கூடாது என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.
- மாணவர்/பிள்ளைக்கு எந்த அறிகுறிகளும் இல்லாதவரை அவர் எதிர்மறை சோதனை முடிவைப் பெற்றாலும் கூட, பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்கு 10 நாட்களுக்குப் பின்னரே மீண்டும் செல்ல முடியும்.
  - **உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனையோர் பாடசாலை, சிறுவர் பராமரிப்பகம் அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனால் அத்தியாவசியம்-அற்ற பிற காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. தடுப்பூசி முழுமையாகப் போடப்பட்ட அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாக இருந்து பின்னர் குணமடைந்த வீட்டு உறுப்பினர்கள் வீட்டில் தங்கியிருக்கத் தேவையில்லை.**
- மாணவர்/பிள்ளைக்கு மேலே குறிப்பிடப்பட்ட அறிகுறிகளில் ஏதாவது ஒன்று ஏற்பட்டால் அல்லது தொற்று இருப்பதாகச் சோதித்தறியப்பட்டால், மேலதிகமான ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**5 வது கேள்விக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- COVID-19 க்குச் சோதிக்கப்படுவதற்காக மதிப்பீட்டு மையம் ஒன்றுக்குச் செல்லவும்.
  - **PCR சோதனையின் போது அவர்களுக்கு எதிர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் இல்லை), அவர்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குத் திரும்பச் செல்லலாம்.**
  - **PCR சோதனையின் போது அவர்களுக்கு நேர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் உள்ளது), அவர்கள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர்கள் திரும்பிச் செல்ல முடியும்.**
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால், மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
  - **உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனையோர் பாடசாலை, சிறுவர் பராமரிப்பகம் அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனாலும் PCR பரிசோதனையில் COVID எச்சரிக்கைச் சோதனை முடிவுகள் எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்படும் வரை, அத்தியாவசியம்-அற்ற வேறு காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. தடுப்பூசி முழுமையாகப் போடப்பட்ட அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாக இருந்து பின்னர் குணமடைந்த வீட்டு உறுப்பினர்கள் வீட்டில் தங்கியிருக்கத் தேவையில்லை.**
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு.இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**6 வது கேள்விக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- சர்வதேசப் பயணம் செய்த தனிநபர்களுக்கான அரசின் வழிகாட்டுதல்களை மாணவர்/பிள்ளை பின்பற்ற வேண்டும், அவர்கள் வந்துசேர்ந்த பின்னர் 14 நாட்களுக்குப் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்லக்கூடாது மற்றும் அரசின் நிபந்தனைகளின்படி சோதிக்கப்பட வேண்டும்.
- மாணவர்/பிள்ளை சுயமாகத்-தனிமைப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டால், 14 நாட்களுக்கு வீட்டிலேயே இருக்க வேண்டும் மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசரநிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது. பயணிகளுக்கான அரசின் நிபந்தனைகள் பற்றிய மேலதிகமான தகவல்களுக்குத் தயவுசெய்து பார்க்கவும் Government of Canada's website
- மாணவர்/பிள்ளைக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் மற்றும்/அல்லது தொற்று இருப்பதாகச் சோதித்தறியப்பட்டால், மேலதிகமான ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**7 வது கேள்விக்கு “ஆம்” என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- பொது சுகாதார ஆலோசனையைப் பின்பற்றவும். உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை திரும்பச் செல்லலாம்.
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால், மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
  - **மாணவர்/பிள்ளைக்கு ஏற்பட்ட அறிகுறிகள் சோதனைகளில் எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உங்கள் பொது சுகாதாரப் பிரிவினால் அனுமதிக்கப்படும் வரை அல்லது அது வேறொரு நோய் எனக் கண்டறியப்படும் வரை, உங்கள் வீட்டிலுள்ள உடன்பிறப்புகள் அல்லது பிற நபர்கள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். தடுப்பூசி முழுமையாகப் போடப்பட்ட அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாக இருந்து பின்னர் குணமடைந்த வீட்டு உறுப்பினர்கள் வீட்டில் தங்கியிருக்கத் தேவையில்லை.**
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**8 வது கேள்விக்கு “ஆம்” என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- COVID-19 க்குச் சோதிக்கப்படுவதற்காக மதிப்பீட்டு மையம் ஒன்றுக்குச் செல்லவும்.
  - **PCR சோதனையின் போது அவர்களுக்கு எதிர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் இல்லை), அவர்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குத் திரும்பச் செல்லலாம்.**
  - **PCR சோதனையின் போது அவர்களுக்கு நேர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் உள்ளது), அவர்கள் தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட வேண்டும். உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர்கள் திரும்பிச் செல்ல முடியும்.**
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால், மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- விரைவான ஆன்டிஜென் சோதனை அல்லது வீட்டு-அடிப்படையிலான சுய-சோதனைகளின் போது, நேர்மறையாகக் கண்டறியப்பட்ட நபர் PCR சோதனையில் எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்படும் வரை, உங்கள் வீட்டிலுள்ள உடன்பிறப்புகள் அல்லது மற்றவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். தடுப்பூசி முழுமையாகப் போடப்பட்ட அல்லது கடந்த 90 நாட்களில் COVID-19 க்கு நேர்மறையாக இருந்து பின்னர் குணமடைந்த வீட்டு உறுப்பினர்கள் வீட்டில் தங்கியிருக்கத் தேவையில்லை.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு. இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**கேள்விகள் அனைத்துக்கும் "இல்லை" என்று நீங்கள் பதிலளித்திருந்தால், உங்கள் பிள்ளை பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்லலாம். இந்த முடிவைப் பற்றி ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பு வழங்குநரினால் உருவாக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றவும்.**

- வழக்கமான நெறிமுறைகளின்படி, இந்நோயின் அறிகுறிகளில் ஏதாவது இருக்கும் நோயுற்ற நபர்கள் அனைவரும் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும், தேவைப்பட்டால் அவர்களின் வழக்கமான சுகாதார வழங்குநரிடம் மதிப்பீடு பெற்றுக்கொள்ள வேண்டும்.
- தீவிரமான அறிகுறிகளைக் கொண்ட அவசர சிகிச்சை தேவைப்படும் நபர்கள் அருகில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்ல வேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்குப் புறம்பான அறிகுறிகள் நபர் ஒருவருக்கு ஏற்பட்டால், அந்த நபரின் அறிகுறிகள் மற்றும் தொற்றுச் சூழலில் அவர் இருந்த வரலாற்று மதிப்பீட்டின் அடிப்படையில் சோதனை உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளைப் பொது சுகாதாரப் பிரிவு பரிந்துரைக்கலாம்.

## ஒன்ராறியோ பொது சுகாதார நிறுவனம் - தொடர்புத் தடமறிதல்

**சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படுகின்றது** இந்தத் தகவல்கள் தொடர்புத் தடமறிதலுக்காக மட்டுமே பொது சுகாதார அதிகாரிகளால் பயன்படுத்தப்படும். தகவல்கள் அனைத்தும் 28 நாட்களில் நீக்கப்படும்.

**திகதி:** ______________________

**பெயர்:** ______________________

**தொலைபேசி அல்லது மின்னஞ்சல்:** ______________________